பெ.செ.எ.327

## பத்திரிகைக் குறிப்பு

சென்னைப் பெருநகர் பகுதிக்கான வரைவு இரண்டாம் முழுமைத் திட்டத்தைப் பற்றி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் 11.04.2007 அன்று வெளியான அரசிதழில் ஓர் அறிக்கை வெளியிட்டது. மறுப்புகள் மற்றும் கருத்துக்களை பெறுவதற்கான கடைசி நாள் 12.07.2007 என தெரிவிக்கப்பட்டிருந்தது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் தலைவருமான திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் இன்று (5.06.07) நடைபெற்ற குழும கூட்டத்தில் வரைவு இரண்டாம் முழுமைத் திட்டத்தின் (Draft Master Plan-II for Chennai Metropolitan Area) தமிழாக்கத்தை வெளியிட்டார். மக்கள் பயன் பெறும் விதத்தில் இத் தமிழ் பிரதி ரூ. 200க்கு சலுகை விலையில் குழும அலுவலகத்தில் கிடைக்கும். மேலும் வரைவு இரண்டாம் முழுமைத் திட்ட அறிக்கையை தமிழிலும் ஆங்கிலத்திலும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும இணைய தளத்தில் (www. cmdachennai.org) இலவசமாக பார்க்கலாம்.

பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, மக்களின் மறுப்புகள் மற்றும் கருத்துகள் பெறுவதற்கான கடைசி நாள் 31.08.2007 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்றும் இதில் வரும் நல்ல கருத்துக்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு சென்னை இரண்டாம் முழுமைத் திட்டம் சிறப்பான முறையில் இறுதி செய்யப்படும் என்று கூறினார்.

சென்னை 600008
நாள் 5.06.2007

உறுப்பினர் -செயலர்
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்

வெளியீடு
இயக்குநர்
செ.ம.தொ.இ., சென்னை-9.